NOVEMBER 2025 **60588/318C5A**

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. Define – Costing.
அடக்கவிலை இயல் – வரையறு.

2. Mention the functional classification of cost.
அடக்கத்தின் நடைமுறை சார்ந்த வகைப்பாட்டினை குறிப்பிடுக.

3. What is Inventory control?
சரக்கிருப்பு கட்டுப்பாடு என்றால் என்ன?

4. List the various levels of stock.
சரக்குகளின் பல்வேறு நிலைகளைப் பட்டியலிடுக.

5. Define – Labour Turnover.
தொழிலாளர் சுழற்சி வீதம் – வரையறு.

6. Write a note on 'Over-time'.
மிகை நேரம் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

7. Define – 'Overheads'.
மேற்செலவுகள் – வரையறு.

8. What is Machine Hour rate?
இயந்திர மணி வீதம் என்றால் என்ன?

9. List out the methods of costing.
அடக்கவிலையியலின் பல்வேறு முறைகளை பட்டியலிடுக.

10. Give the meaning of Scrap.
எறிமதிப்பு என்பதன் பொருள் தருக.

11. What are the industries in which operating costing method can be used?
இயக்க அடக்கவியல் முறையினை பயன்படுத்தக்கூடிய தொழிற்சாலைகள் யாவை?

12. What is Process costing?
படிமுறை அடக்கவியல் என்றால் என்ன?

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. Describe the objectives of costing.
அடக்கவியலின் நோக்கங்களை விவரி.

14. The following information relates to Toy Gun manufacturing company for the 3 months ending 31st March 2023.

	Rs.
Direct materials consumed	18,000
Direct labour paid	12,000
Direct expenses	4,000
Factory overheads	6,000
Administrative overheads	4,500
Selling and distribution overheads	2,500

1000 units of Toy Gun produced during the period and all the units produced are sold at Rs. 53 per unit. Prepare a cost sheet.

டாய் கன் உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் 31, மார்ச் 2023ல் முடிவுறும் மூன்று மாத காலத்திற்குரிய விவரங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன :

	ரூ
நேரடி மூலப்பொருட்கள் நுகர்வு	18,000
நேரடி உழைப்பு/கூலி செலுத்தியது	12,000
நேரடிச் செலவுகள்	4,000
தொழிற்சாலை மேற்ச்செலவுகள்	6,000
நிர்வாக மேற்ச்செலவுகள்	4,500
விற்பனை மற்றும் பகிர்மான மேற்ச்செலவுகள்	2,500

1000 அலகுகள் பொம்மை துப்பாக்கிகள் இக்காலகடடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு அனைத்தும் ஒரு அலகு ரூ.53 என விற்பனைச் செய்யப்பட்டது. அடக்கவிலைத் தாள் தயாரிக்க.

15. The following data pertaining to a component Part No. 0628
Purchase price per unit – Rs.60
Purchase order cost – Rs.240
Total requirement for a 45 week year – 9,000 units
Carrying cost – 20% of average inventory value
What is the Economic Order Quantity? What is the frequency of placing the order?

ஒரு உட்கூறு பகுதி எண். 0628ன் விபரங்கள் கீழ்வருமாறு :

ஒரு அலகின் கொள்முதல் விலை – ரூ.60

கொள்முதல் உத்தரவு அடக்கம் – ரூ.240

ஓர் ஆண்டின் 45 வார காலத்திற்கான மொத்த தேவை – 9,000 அலகுகள்

சராசரி சரக்கின் மதிப்பில் – 20% கொண்டு செல்லும் அடக்கம் ஆகும்

சிக்கன கொள்முதல் அளவு யாது? ஓர் ஆணை பிறப்பிதற்கும் மற்றொன்றுக்கும் உள்ள இடைவெளி யாது?

16. Bring out the causes of Labour Turnover.

தொழிலாளர் சுழற்சி வீதத்திற்கான காரணங்களை வெளிக்கொணர்க.

17. From the following particulars, calculate Machine Hour rate.

Cost of machine : Rs.11,000

Scrap value of the machine – Rs.680

Repairs for the effective working life of the machine – Rs.1,500

Standard charges for 4 weeks period – Rs.40

Effective working life – 10,000 hours

Power used : 6 units per hour at 5 paise per unit

Hours worked in 4 weeks period – 120 hours.

கீழ்கண்ட விபரங்களிலிருந்து இயந்திர மணி நேர அடக்கத்தைக் காண்க.

இயந்திரத்தின் அடக்கவிலை – ரூ.11,000

இயந்திரத்தின் எறி மதிப்பு – ரூ.680

இயந்திரத்தின் ஆயுட்கால பழுதுபார்ப்பு செலவு – ரூ.1,500

நிலையான செலவு : 4 வாரங்களுக்கு – ரூ.40

ஆயுட்கால பணி நேரம் – 10,000 மணிகள்

மின்சக்தி நுகர்வு – 1 மணிக்கு 6 அலகுகள் அலகு ஒன்றுக்கு 5 பைசா

இயங்கிய நேரம் 4 வாரங்களுக்கு – 120 மணிகள்.

18. In a factory two types of radio sets are produced namely X and Y. From the following particulars prepare a statement showing total cost and profits of radios sold

	X	Y
	Rs.	Rs.
Materials	81,900	1,08,680
Labour	46,800	62,920

Works overhead is charged at 80% on labour and office overhead is charged at 15% on works cost. X radio sets sold during the period are 234 at Rs.1,000 each and 286 Y radio sets are sold at Rs.1,100 each.

ஒரு தொழிற்சாலையில் X மற்றும் Y ஒன்று இருவகையான ரேடியோ செட்டுகள் தயாரிக்கப்பட்டன. கீழ்வரும் விவரங்களைக் கொண்டு, மொத்த அடக்கம், மற்றும் ரேடியோ விற்பனையின் இலாபங்களை உள்ளடக்கிய ஒரு அட்டவணையைத் தயாரிக்க :

	X	Y
	ரூ.	ரூ.
மூலப்பொருட்கள்	81,900	1,08,680
உழைப்பு/கூலி	46,800	62,920

வேலை மேற்செலவுகள் கூலியில் 80% ஆகவும் மற்றும் அலுவலக மேற்ச்செலவுகள் 15%, வேலை (அ) தொழிற்சாலை மேற்செலவுகளிலும் கணக்கிடப்படுகிறது. நடப்பு காலத்தில் X என்ற ரேடியோ செட்டுகள் 234, ஒவ்வொன்றும் ரூ.1,000 க்கு விற்பனை செய்யப்பட்டன, மற்றும் Y ரேடியோ செட்டுகள் 286 ஒவ்வொன்றும் ரூ.1,100 க்கு விற்பனை செய்யப்பட்டன.

19. Calculate the total kms and total passenger kms from the following :

Number of buses – 5

Trips made by each bus – 4

Distance of Route – 20 kms (oneway)

Days operated in a month – 25

Capacity in each bus – 50 passengers

Normal passengers traveled – 90% of capacity.

கீழ்காணும் விவரங்களைக் கொண்டு, மொத்த கிலோமீட்டர் மொத்த பயணியர் கிலோ மீட்டரை கணக்கிடுக.

பேருந்துகளின் எண்ணிக்கை – 5

ஒவ்வொரு பேருந்தின் பயணத் தடவை – 4

செல்வழி தூரம் – 20 கிலோமீட்டர் (ஒரு வழிக்கு)

ஒரு மாதத்தில் இயங்கிய நாட்கள் – 25

பேருந்தின் கொள்ளளவு – 50 பயணிகள்

சராசரி பயணிகள் – கொள்ளளவில் 90% பயணித்தனர்

PART C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

20. Explain the differences between Financial accounting and Cost accounting.

நிதிநிலை கணக்கியல் மற்றும் அடக்கவிலை கணக்கியலுக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.

21. Two components A and B are used as follows :

Normal usage – 300 units per week each

Maximum usage – 450 units per week each

Minimum usage – 150 units per week each

Re-order quantity :

A – 1200 units

B – 1,800 units

Re-order period :

A – 2 to 4 weeks

B – 3 to 6 weeks

Calculate for each component :

(a) Re-order level;

(b) Minimum level;

(c) Maximum level and

(d) Average stock level.

A மற்றும் B ஆகிய இரண்டு பொருட்கள் கீழே உள்ளவாறு பயன்படுத்தப்படுகின்றது,

இயல்பு பயன்பாடு – 300 அலகுகள் வாரத்திற்கு ஒவ்வொன்றும்

உச்ச அளவு பயன்பாடு – 450 அலகுகள் வாரத்திற்கு ஒவ்வொன்றும்

குறைந்த அளவு பயன்பாடு – 150 அலகுகள் வாரத்திற்கு ஒவ்வொன்றும்

மறு - உத்தரவு அளவு :

A – 1200 அலகுகள்

B – 1,800 அலகுகள்

மறு உத்தரவு காலம் :

A – 2 லிருந்து 4 வாரங்கள்

B – 3 லிருந்து 6 வாரங்கள்

ஒவ்வொரு பொருளுக்கும் கணக்கிடுக :

(அ) மறு-உத்தரவு அளவு நிலை

(ஆ) குறைந்த அளவு நிலை

(இ) உச்ச அளவு நிலை

(ஈ) சராசரி இருப்பு அளவு நிலை.

22. From the following particulars, calculate earnings of worker under :

(a) Time rate system

(b) Piece wage rate

(c) Halsey plan, and

(d) Rowan plan.

Wage rate – Rs.2 per hour

Production per hour – 4 units

Dearness allowance – Re.1 per hour

Standard time fixed – 80 hours

Actual time taken – 50 hours

Production – 250 units.

கீழ்காணும் விவரங்களைக் கொண்டு, ஒரு தொழிலாளியின் வருவாயை கீழ்காணும் முறைகளில் கணக்கிடுக :

(அ) நேரடி வீத முறை

(ஆ) அலகு கூலி வீதம்

(இ) ஹால்சி திட்டம் மற்றும்

(ஈ) ரோவன் திட்டம்.

கூலி வீதம் ஒரு மணிக்கு – ரூ.2

ஒரு மணி நேரத்திற்கு உற்பத்தி – 4 அலகுகள்

அகவிலைப்படி ஒரு மணி நேரத்திற்கு – ரூ.1

நிலையான நேரம் – 80 மணிகள்

எடுத்துக்கொண்ட நேரம் – 50 மணிகள்

உற்பத்தி – 250 அலகுகள்.

23. A company has three production departments and two service departments. Their perspective expenditures are given below :

Production Departments			Service Departments		
A	–	Rs.800	X	–	Rs.234
B	–	Rs.700	Y	–	Rs.300
C	–	Rs.500			

Service departments give service in the following manner to various departments :

Service departments	A	B	C	X	Y
X	20%	40%	30%	–	10%
Y	40%	20%	20%	20%	–

Show the distribution of Service department overheads under simultaneous equation method.

ஒரு நிறுமம் மூன்று உற்பத்தி துறைகளையும், இரண்டு சேவைத் துறைகளையும், அதன் செலவுகளையும் கீழ்வருமாறு தந்துள்ளது :

உற்பத்தி துறைகள்			சேவை துறைகள்		
A	–	ரூ.800	X	–	ரூ.234
B	–	ரூ.700	Y	–	ரூ.300
C	–	ரூ.500			

சேவைத் துறைகள் மற்றத் துறைகளுக்கான சேவைகளை கீழ்வருமாறு அளித்தது :

சேவைத் துறைகள்	A	B	C	X	Y
X	20%	40%	30%	–	10%
Y	40%	20%	20%	20%	–

சேவைத் துறையின் மேற்செலவுகளை ஒரே நேர மேம்பாட்டு முறையின் பகிர்வதை காண்பிக்கவும்.

24. A product passes through three processes, I, II and III. From the following information prepare the process accounts assuming that there were no opening (or) closing stock

	Process I	Process II	Process III
	Rs.	Rs.	Rs.
Materials	1,000	1,500	500
Labour	5,000	8,000	6,500
Overheads	1,050	1,188	2,009
Actual output (units)	9,500	9,100	8,100
Normal loss	3%	5%	8%

The wastage of Process I was sold at 25 paise per unit, that of Process II at 50 paise per unit and that of Process III at Re.1 per unit. Raw materials of 10,000 units were introduced into Process I in the beginning at a cost of Re.1 per unit.

ஒரு பொருள் I, II மற்றும் III படிமுறைகளில் தயாராகிறது. கீழ்காணும் விவரங்களைக் கொண்டு, படிமுறை கணக்குகளை தயாரிக்க மேலும் தொடக்க சரக்கிருப்பு மற்றும் இறுதிச் சரக்கிருப்பு ஏதும் இல்லை எனக் காண்க.

	படிமுறை I	படிமுறை II	படிமுறை III
	ரூ.	ரூ.	ரூ.
மூலப்பொருட்கள்	1,000	1,500	500
கூலி	5,000	8,000	6,500
மேற்செலவுகள்	1,050	1,188	2,009
உண்மையான உற்பத்தி (அலகுகளில்)	9,500	9,100	8,100
சாதாரண நட்டம்	3%	5%	8%

கழிவுப்பொருள்கள் படிமுறை I-ல் ஓர் அலகு 25 பைசாவிற்கும், படிமுறை II-ல் 0.50 பைசாவிற்கும் மற்றும் படிமுறை III-ல் ஓர் அலகு ரூ.1 -க்கும் விற்கப்பட்டது.

10,000 அலகுகள் ரூ.1 ஓர் அலகு வீதம் மூலப்பொருட்கள் படிமுறை I-ல் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

———————